யாழ்ப்பாண பல்கலைக்கழகம் - 2024
--

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் மீதான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள

வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

இல குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா.26,678,265 தொகை நன்கொடைகள் மற்றும் மானியங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் படி வருமானமாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படுவதற்குப் பதிலாக வரையறுக்கப்பட்ட நிதியக் கணக்கிற்குக் கீழ் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், வரையறுக்கப்பட்ட நிதியம் கூட்டப்பட்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான மிகை அதே தொகையால் முறையே குறைக்கப்பட்டிருந்தது.	வருமானக்கூற்றில் வருமானத்தை சமர்ப்பிப்பதிலுள்ள எழுத்துப் பிழை காரணமாக வேறுபாடுகள் அடையாளம் காணப்பட்டன. நிதிநிலை அறிக்கைகளின் உண்மைத்தன்மை மற்றும் நேர்மையை உறுதி செய்வதற்காக, பொருத்தமான பொது குறிப்பேடுகள் மூலம் இந்த வேறுபாடுகள் உடனடியாக சரிசெய்யப்பட்டுள்ளன.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்கப்பட வேண்டும்.

(ஆ) மீளாய்வாண்டில் சுயநிதி படிப்புகள் மற்றும் செயற்திட்டங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா.27,018,953 தேறிய வருமானம் வருமானமாக அங்கீகரிக்கப்படுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புகளுக்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான நடைமுறைப் பொறுப்புகள் மற்றும் மிகை ஆகியவை முறையே அதே தொகையால் அதிகமாகவும் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன.	மேற்கூறப்பட்டவாறு	மேற்கூறப்பட்டவாறு

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்.

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)நிலையான சொத்துக்கள் பதிவேட்டைத் தயாரிப்பதற்கான மென்பொருளை உருவாக்குவதற்காக 2024 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட ரூ.4,536,095 தொகை, மூலதனமாக்கப்பட்டு அருவச் சொத்தாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக, செயல்பாட்டில் உள்ள பணியின் கீழ் வகைப்படுத்தப்பட்டது.	இச் சொத்தானது பல்கலைக்கழகம் முழுவதும் அதன் நோக்கத்திற்காக முழுமையாக செயல்படுவதாக கருதப்படாமையால் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்குப் பயன்படுத்தப்படும் மென்பொருளுடன் தொடர்புடைய ரூபா. 4,536,095 தொகை ஆரம்பத்தில் புனரமைப்பு வேலையின் கீழ் வகைப்படுத்தப்பட்டது, செயல்பாட்டுத் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்காக 2024 ஆம் ஆண்டில் மேம்பாடுகள் நடந்து கொண்டிருந்தாலும் முந்தைய அறிக்கையிடல் காலத்தில் அனைத்து தொடர்புடைய பகுதிகளிலும் முழு அமுலாக்கல் இன்னும் செயல்பாட்டில் இருந்தது.	மென்பொருள் சொத்துக்களை மூலதனமாக்குவதற்கும அதற்கிணங்க பெறுமானத்தேய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)கொள்கைத்திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சால் ஒருங்கிணைந்த பண்ணை மற்றும் பயிற்சி நிலையங்களை நடாத்துவதற்கு 2015 ஆம் ஆண்டில் நன்கொடையளிக்கப்பட்ட புளியங்குளத்திலிலுள்ள காணி மற்றும் கட்டிடங்களானது இந்த அறிக்கைத்திகதி வரையிலும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.	புளியங்குளம் ஒருங்கிணைந்த பண்ணை மற்றும் பயிற்சி மைய நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிலம், கட்டிடங்கள் மற்றும் பிற சொத்துக்கள் பல்கலைக்கழகத்திற்கு முறையான உரிமையை மாற்றாமல், கொள்கைத்திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சால் வழங்கப்பட்டன. தெளிவான உரிமைப் மாற்றமின்றி நிதிநிலைமை அறிக்கைகளில் இந்த சொத்துக்களை அங்கீகரிப்பது குறிப்பிடத்தக்க அக்கறையை ஏற்படுத்துகிறது.	இந்தச் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டியவைகள்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
05 முதல் 06 ஆண்டுகள் வரை கடந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாமல் காணப்படுகின்ற ரூபா 5,130,148 வருமதி மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உயர்கல்வி அமைச்சிலிருந்து பெற வேண்டிய கடன்களைத் தீர்ப்பதற்கான செயல்முறையை எளிதாக்குவதற்காக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உயர்கல்வி அமைச்சுடன் நிலுவையில் உள்ள தொகை தொடர்பாகத் தொடர்பு கொள்ளத் தொடங்கியுள்ளது. அமைச்சிலிருந்து நிதி கிடைத்தவுடன், பெற வேண்டிய தொகையை உடனடியாகத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.	நிலுவைத் தொகையை உரிய காலத்தில் வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத்தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XX இன் பிரிவு 03	கல்விசார் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்வதை உறுதிப்படுத்தாமல் ரூபா 3,240,859,349 தொகையான சம்பளங்கள் மற்றும் படிகள் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.	இலங்கை பல்கலைக்கழக முறைமையிலுள்ள கல்விசார் உத்தியோகத்தர்களாள் பொதுவாக வருகைப்பதிவேட்டில் கைச்சாத்திடாமையானது பொதுவாகவுள்ளது. அதற்கு பதிலாக, கல்வி ஊழியர்களின் பணி வருகையை கண்காணிப்பது பாரம்பரியமாக அந்தந்த துறைத் தலைவர்களால் நடத்தப்படுகிறது. இந்த நெறிமுறை 2017 நவம்பர் 11 அன்று பொது முயற்சி நிறுவனங்களின் குழுக் (COPE) கூட்டத்தில் நடந்த விவாதங்களின் போது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது	தாபன விதிக்கோவையின் தேவைப்பாடுகளுடன் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் இணங்க வேண்டும்.

(ஆ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2015 நவம்பர் 17 இன் 15/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை.	பரீட்சை நடைபெற்று 3 மாதங்களுக்குள் பெறுபேறுகள் வெளியிட வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தின் 12 பீடங்களில் நடைபெற்ற பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதற்காக 04 மாதங்கள் தொடக்கம் 30 மாதங்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டது.	பரீட்சை பெறுபேறுகள் சரியான நேரத்தில் வெளியிடப்படுவதை உறுதி செய்வதற்கு கடுமையான நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதிகள் மற்றும் பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் பாடங்கள் போன்ற தேர்வு விவரங்கள், ஏதேனும் தாமதங்கள் ஏற்பட்டால் ஏற்படும் கால அளவு உள்ளிட்ட முடிவு வெளியீடுகளின் நிலையை விவரிக்கும் மாதாந்திர அறிக்கைகள் கவனமாக தொகுக்கப்பட்டு செனட்டில் சமர்ப்பிக்கப்படுகின்றன.	நிர்ணயித்த காலப்பகுதியில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும்.
(இ)	பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 2013 ஏப்ரல் 10 ஆம் திகதியிட்ட 04/2013 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை கடிதத்தால் திருத்தப்பட்டவாறான திருத்தப்பட்டவாறான XXVI ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 98 இடங்களுக்கான வருடாந்த பொருள் கணக்கெடுப்பு அறிக்கை அறிக்கையிடல் திகதி வரையிலும் முடிக்கப்பட்டிருக்கவில்லை.	மொத்தமுள்ள 192 இடங்களில், 98 இடங்கள் காலக்கெடுவிற்குள் தங்கள் அறிக்கைகளை சமர்ப்பிக்க முடியவில்லை. இந்த தாமதத்திற்கான முதன்மைக் காரணம், பெரும்பாலான பீடங்களில் ஆண்டின் முதல் காலாண்டு பிரதான பரீட்சைக் காலத்துடன் ஒத்துப்போவதாகும். கணக்கெடுப்பு குழுவின் உறுப்பினர்களாகவும், உருப்படிகளின் பாதுகாவலர்களாகவும் ஈடுபட்டுள்ள கணிசமான எண்ணிக்கையிலான ஊழியர்கள் இந்தக் காலகட்டத்தில் தேர்வு தொடர்பான கடமைகளிலும் ஈடுபட்டிருந்தனர். பொறுப்புகளில் ஏற்பட்ட இந்த வேறுபாடு காரணமாக சில இடங்களில் கணக்கெடுப்புகளை	தாபன சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

			நடத்துவதிலும் அறிக்கைகளை இறுதி செய்வதிலும் தாமதம் ஏற்பட்டது.	
(ஈ)	பல்கலைக்கழக மானிய ஆணையத்தால் வெளியிடப்பட்ட 2022 சனவரி 03 ஆம் திகதியிட்ட 01/2022 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி.	முறையான சரக்குக் கட்டுப்பாடு மற்றும் சொத்து பொறுப்புணர்வை உறுதி செய்வதற்காக, பல்கலைக்கழகங்கள் நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களின் சரிபார்ப்பை முடிக்க வேண்டும். இருப்பினும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் கடந்த ஐந்து (05) ஆண்டுகளாக நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களின் இருப்புக் கணக்கெடுப்பை நடத்தவில்லை என்பது கவனிக்கப்பட்டது.	நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களின் கணக்கெடுப்பு 2019 திசெம்பர் 31 வரையிலான நிதியாண்டில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு 2020 இல் நிறைவடைந்தது. மேலும், 2025 ஆம் ஆண்டில் நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களை சரிபார்க்கும் பணியில் நூலகம் ஈடுபட்டுள்ளது.	நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களின் முழுமையான இருப்பு சரிபார்ப்பை நடத்தவும், புதுப்பிக்கப்பட்ட சரக்குப் பதிவுகளைப் பராமரிக்கவும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 320,756,997 தொகையான பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 115,076,218 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 435,833,215 தொகையான பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் வருமான அதிகரிப்புடன் ஒப்பிடும்போது மீண்டெழும் செலவீனங்கள் அதிகளவில் அதிகரித்தமை இந்தப் பற்றாக்குறைக்கு பிரதான காரணமாகவிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	புலமைப்பரிசில் திட்டங்களில் 1980 முதல் 2024 வரையான காலப்பகுதியில் வெளிநாடு சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் எழுபத்தியென்பது (79) கல்விசார் ஊழியர்களும் இருபத்தொரு(21) கல்விசாரா ஊழியர்களும் புலமைப்பரிசில்களை முடித்து கடமைக்கு சமூகமளிக்கவில்லை. எவ்வாறாயினும், ஒப்பந்தங்களை மீறிய அதிகாரிகளிடமிருந்து ரூபா	பிணைமுறி மற்றும் ஒப்பந்தக் கடமைகளுக்கான குழு (COBA), பிணைமுறி தவறுபவர்களின் விவரங்களை விடாமுயற்சியுடன் ஆராய்ந்து ஒரு விரிவான கொள்கை ஆவணத்தைத் தொகுத்துள்ளது. இந்தக் கொள்கை ஆவணம், நடைமுறையில் உள்ள சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பையும், 2017 வரை பல்கலைக்கழக கவுன்சிலின் பொருத்தமான தீர்ப்புகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, மிக நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.	நிலுவையாகவுள்ள முறிப் பெறுமதியை உடனடியாக மீட்க மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	87,196,060 தொகையான ஆதன பிணைகளை மீளப்பெறுவதற்கு உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி பல்கலைக்கழகம் முறையான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை.	முதுகலை படிப்பை முடிக்காமல் கடமைகளைத் தொடங்கிய கல்வி ஊழியர்கள் தொடர்பான பிரச்சினையும் கவுன்சிலின் பரிந்துரையுடன் தீர்க்கப்பட்டது, கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களுக்கான நடவடிக்கைகளை பதிலளிக்காத வழக்குகள் அதிகரிப்பது, முன் பணம் செலுத்துவதைக் கருத்தில் கொண்டு மீதமுள்ள கடமைகளைத் தள்ளுபடி செய்வது மற்றும் அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்கள் மூலம் தொகைகளை மீட்டெடுப்பது, கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் தவணைக் கொடுப்பனவுகள் மூலம் நிலுவைத் தொகையைத் தீர்க்கலாம், இணங்காததற்கு சட்ட விளைவுகள் ஏற்படும். ஆகியவற்றை உள்ளடக்கி COBA கோடிட்டுக் காட்டியுள்ளது. 2025 மார்ச் 31 வரையிலும் பல்வேறு பீடங்களிலிருந்து ரூபா 75,590,267 தொகை மீட்கப்பட்டது.	
(ஆ)	பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் முறைமைகள் தொழில்நுட்பத்திற்கான கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம 2021 திசெம்பர் 15 அன்று ரூபா.432,400,031 ஒப்பந்த மதிப்பில் வழங்கப்பட்டது. ஒப்பந்தத்தின்படி, நிர்மாணமானது 2023 திசெம்பர் 31 அன்று முடிக்கப்பட வேண்டியிருந்தபோதும் 48 சதவீத வேலைகள் 2025 ஏப்ரல் 21 வரை மட்டுமே முடிக்கப்பட்டதாகவும், அந்த திகதியிலுள்ளவாறான கொடுப்பனவுகள் ரூபா 337,983,931 ஆகவும் இருந்தது அவதானிக்கப்பட்டது.	செயற்திட்டத்தை முடிப்பதில் காலதாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் பின்வருமாறு: (i) ஆரம்பத்தில், குறிப்பாக நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்ததால், தளம் தொடர்பான பல சிக்கல்கள் மற்றும் பாதகமான வானிலை நிலைமைகள் அகழ்வாராய்ச்சி மற்றும் அடித்தளப் பணிகளைப் பாதித்தன. (ii) கட்டுமானப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறை மற்றும் குறிப்பிடத்தக்க போக்குவரத்து சிக்கல்கள் இருந்தன, அவை பொருளாதார நெருக்கடி, ”அரகலயா” போராட்டங்கள் மற்றும் நாடு எதிர்கொண்ட எரிபொருள் நெருக்கடியால்	முறையான திட்ட கண்காணிப்பு வழிமுறைகள் நடைமுறையில் இருப்பதை உறுதி செய்வதற்கும், மீதமுள்ள பணிகளை விரைவுபடுத்துவதற்கும், பொது நிதியைப் பாதுகாப்பதற்கும், திட்டத்தை சரியான நேரத்தில் முடிப்பதை உறுதி செய்வதற்கும் தாமதங்களுக்கு அபராதம் விதிப்பது போன்ற தொடர்புடைய ஒப்பந்த விதிகளை

		மோசமடைந்தன. (iii) முடிக்கப்பட்ட பணிகளுக்கான ஒப்பந்ததாரரின் முன்னேற்றக் கோரிக்கைகளைத் தீர்ப்பதில் கணிசமான தாமதங்கள் ஏற்பட்டன. ஒப்பந்தப் பொறியாளரால் சான்றளிக்கப்பட்டு, துணைவேந்தரால் பரிந்துரைக்கப்பட்டு, தொடர்புடைய நிதி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், குறிப்பிட்ட காலத்திற்குள் எந்த முன்னேற்றக் கோரிக்கைகளும் தீர்க்கப்படவில்லை. இந்தத் தாமதங்கள் திட்ட நிறைவுக்கான ஒட்டுமொத்த தாமதத்திற்கு பங்களித்தன.	அமல்படுத்துவதற்கும் நிறுவனம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
(இ)	கடந்த 3 முதல் 5 ஆண்டு காலத்தில் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களை வழங்குவதற்காக ஐந்து வழங்குனர்களுக்கு மொத்தம் ரூபா.7,488,500 முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும், தொடர்புடைய புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் மீளாய்வாண்டின் இறுதியில் கூட வழங்கப்படவில்லை. மேலும் முற்பணத்தையும் வசூலிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	அவர்களின் பதிலின்படி, வழங்கப்படாத பெரும்பாலான பத்திரிகைகள் கொவிட்-19 காலகட்டத்தைச் சேர்ந்தவை, அந்தக் காலகட்டத்தில் பல பத்திரிகைகள் வெளியிடப்படவில்லை. நிலுவையில் உள்ள பத்திரிகைகள் மறுபதிப்பு செய்யப்படுவதை வெளியீட்டாளர்களிடமிருந்து வழங்குனர்கள் இப்போது உறுதிப்படுத்தியுள்ளார். மாத இறுதிக்குள் முழுமையான விநியோகம் நிறைவேற்றப்படும் அல்லது வழங்கப்படாத எந்தவொரு பத்திரிகைகளுக்கும் செலவுத்தாள் வழங்கப்படும் என்று அவர்கள் எங்களுக்கு உறுதியளித்தனர்.	முன்பணம் செலுத்துவதற்கும் பொருட்களைப் பெறுவதற்கும் ஒரு வலுவான உள் கட்டுப்பாட்டு முறைமை நிறுவப்பட வேண்டும்.

(ஈ)	பல்கலைக்கழக நூலகர் பதவி 2019 முதல் வெற்றிடமாக உள்ளது.	2022 ஆகஸ்ட் 08 முதல் நிரந்தர கல்விப் பணியாளர் வெற்றிடங்களை நிரப்புவது இடைநிறுத்தப்பட்டதால், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் விடுமுறைக்குப் பிந்தைய, ராஜினாமா, ஓய்வு அல்லது இறப்பு காரணமாக ஏற்படும் வெற்றிடங்கள் DMS இன் ஒப்புதலுடன் மட்டுமே நிரப்பப்பட்டன. இருப்பினும், UGC இன் அறிவுறுத்தலின்படி, 2019 திசெம்பர் 25 முதல் நிரப்பப்படாமல் உள்ள வெற்றிடமாகவுள்ள நூலகர் பதவியை நிரப்ப DMS அனுமதி வழங்கப்படவில்லை.	நூலகர் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.